பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 29 புதன்கிழமை 14.09.2022 கதிர் 200

## பால் புரைக்கேறி பெண் சிசு சாவு!

பிறந்து நான்கு நாள்களேயான பெண் சிசு ஒன்று பால் புரைக்கேறி உயிரிழந்துள்ளது.

இந்தச் சோகம் மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த குடும்பமொன்றுக்கே நேர்ந்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 9ஆம் திகதி பிரசவம் நடந்த நிலையில், தாயும் சிசுவும் ☞2

# குற்றம் இழைத்த அதிகாரிகளை உடன் புனர்வாழ்வுக்கு அனுப்புக!



### மகசின் சிறையில் அரசியல் கைதிகளின் உறவுகளை அவமானப்படுத்தியமைக்கு அருட்தந்தை கண்டனம்

மகசின் சிறைச்சாலையில் அரசியல் கைதிகளைப் பார்வையிட வந்த உறவுகளை சோதனை என்ற பெயரில் அவமானப்படுத்தியமையையும், உளரீதியாக தாக்கத்தை ஏற்படுத்தியதையும் வன்மையாகக் கண்டிப்பதாக அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார். ☞2

## தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும்

### பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஆதரவு தெரிவிப்பு



பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உடனடியாக இரத்துச்செய்யப்படவேண்டும். அதன் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைப்பட்டுள்ள காலிமுகத்திடல் போராட்டச் செயற்பாட்டாளர்கள் மற்றும் ☞2

## அரச அடக்குமுறைகளுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் பெரும் போராட்டம்



(இ.கலையமுதன்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு என்ற அமைப்பால் யாழ்ப்பாணத்தில் இன்று மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இன்று காலை 10 மணியளவில் ஒன்றுகூடிய ☞2

## பயங்கரவாதிகளை விடுவிக்க முடியாது

### ஊர்திப் பேரணியை எதிர்க்கின்றோம் என்று கொக்கரிக்கின்றார் அமைச்சர்



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்கி விட்டு நாட்டைத் துண்டாட நினைக்கும் பயங்கரவாதிகளுக்குத் தீனிபோட முடியாது. சிறைச்சாலைகளிலுள்ள பயங்கரவாதிகளை விடுவிக்கவும் முடியாது. எனவே, பயங்கரவாதிகளையும் வன்முறையாளர்களையும் அடக்கப் பயங்கரவாதத் ☞2

## மனித உரிமையை வலியுறுத்தி வவுனியாவில் இன்று போராட்டம்




மனித உரிமை செயற்பாட்டாளர்களை சுதந்திரமாகச் செயற்பட விடுங்கள் எனும் கோரிக்கையை முன்வைத்து வவுனியாவில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது ☞2

## இரண்டு வருடங்களுக்கு பட்டினி அவலம் நீடிக்கும்


### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



இன்று நாட்டில் ஒரு பகுதியினர் உணவின்றித் தவிக்கின்றனர். நடுத்தர மக்கள் வருமானத்தை இழந்துள்ளனர். அவர்கள் யாரிடமும் பிச்சை எடுக்க விரும்புவதில்லை. இந்த உணவு நெருக்கடி நிலை இன்னும் இரண்டு வருடங்களுக்கு ☞2

## சர்வதேசத்தை ஏமாற்ற ஸ்ரீலங்கா அரசு முயற்சி

### ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா குற்றச்சாட்டு



தேசிய பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதன் நோக்கம், பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு விட்டது என்று சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கே. தேசிய பாதுகாப்புச் சட்டம் என்பது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மறு பெயரே.

- இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி சட்டத்தரணி ☞2

## இலங்கை – இந்தியர்கள் 10 பேர் 434 கிலோ கஞ்சாவுடன் கைது!



(ந.லோகதயாளன்)

434 கிலோ கேரள கஞ்சாவுடன் இலங்கை மற்றும் இந்தியர்கள் தலா ஐவர் என 10 பேர் கற்பிட்டிக் கடலில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தின் தூத்துக்குடியில் இருந்து கடத்தி வரப்பட்ட கேரள கஞ்சாவைக் கற்பிட்டியில் இறக்கி விட்டுத் தப்பிச் செல்லும் நோக்கில் உட்புகுந்த தூத்துக்குடியைச் சேர்ந்த ஐவர் இலங்கைப் படகில் கேரள கஞ்சாவை மாற்ற முற்பட்டபோது இன்று காலை கைது செய்யப்பட்டுள்ளனர். ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## குற்றம் இழைத்த.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவரால் இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

சிறைச்சாலைகள் தினத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறவுகளை பார்வையிட வந்த உறவுகளை சோதனை என்ற பெயரில் அவமானப்படுத்தப்பட்டதையும் அவர்களுக்கு எதிராக இனவாத வார்த்தை பிரயோகம் மேற்கொண்டு உளரீதியாக தாக்கத்தை ஏற்படுத்தியதையும் சிறைச்சாலை நிர்வாகமும், சிறைச்சாலைகள் அமைச்சும் விசாரணை நடத்த வேண்டும் என்பதோடு இச்சம்பவம் தொடர்பில் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வன்மையான கண்டனத்தையும் தெரிவிக்கின்றது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட நாட்களாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளதமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிடுவதற்கு உறவுகள் வருவது குறைவு. ஒரு சிலரை பார்வையிட உறவுகள் வருவதே இல்லை. இதற்குப் பொருளாதாரம், நீண்ட தூரம், வந்து தங்கி செல்வதற்கான வசதியின்மை மட்டுமல்ல மொழி தெரியாது என்பதும் இதனால் தாம் அவமானப்பட்டு விடுவோமோ எனும் பயமும் ஒரு காரணமாகும். சிறைச்சாலைகள் தினத்தில் கூட்டாக வந்த போதும் அவமானப்படுத்தப்பட்டுள்ளனர். இதனை இனவாத வெறி, அதிகார மமதை என்றே கூற வேண்டும்.

சிறைச்சாலைகள் குடும்ப தினம் என்பது கைதிகளுக்குக் கிடைக்காத குடும்ப மகிழ்ச்சியை மீள பெற்றுக் கொடுப்பதும், அக் குடும்ப மகிழ்ச்சியைத் தக்க வைப்பதற்கு கைதிகள் திருந்துவதற்கான ஒரு மனநிலையை உருவாக்குவதுமே நோக்கமாகும்.

இத் தினத்தில் சுதந்திரமும் மனித உரிமையும் காக்கப்பட்டு உறவுகளும் கைதிகளும் மகிழ்வை அடைய வேண்டும். அத்தகைய மகிழ்வு தமிழ் கைதிகளுக்கும் அவர்களின் உறவுகளுக்கும் மறுக்கப்பட்டுள்ளது.

இதனைச் சீர்செய்ய வேண்டும் எனில் சிறை அதிகாரிகளுக்கு சட்டம் தொடர்பில் மட்டுமல்ல சீருடைக்கும் கையில் வைத்திருக்கும் ஆயுதத்துக்கும் அப்பால் ஒழுக்கம், மனித உறவு, மனித கௌரவம் தொடர்பிலும் பயிற்சி பெறுவதற்கு வழி வகுக்க வேண்டும்.

குற்றம் இழைத்த அதிகாரிகள் புனர்வாழ்வுக்குஅனுப்பப்படவேண்டும். தமிழர்கள் விடயத்தில் இது நடக்கப் போவதில்லை என்பது கடந்த கால எமது அனுபவமாகும்.

இதே அதிகார மமதை மற்றும் இனவாத வெறி யில் கடந்த வருடம் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சராக இருந்தவர் அனுராதபுரம் சிறைச்சாலைக்குக் குடிவெறியில் தமது நண்பர்களோடு சென்று தமிழ் அரசியல் கைதிகளை முழங்காலில் நிற்க செய்ததோடு ஒரு கைதியின் நெற்றியில் துப்பாக்கியை வைத்து கொலை அச்சுறுத்தல் விடுத்தார். அதற்கு ஆட்சியாளர்கள் எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. அவர் மீண்டும் இராஜாங்க அமைச்சராக்கப்பட்டுள்ளமை ஆட்சியாளர்கள் நீதிக்கும், மனித உரிமைக்கும் விடுக்கும் சவால் என்று கூற வேண்டும்.

அதுமட்டுமல்ல நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, இது பௌத்த நாடு சிங்கள நாடு நாம் விரும்பியவாறு நாட்டில் எதையும் செய்யலாம் என்று தொடர்ந்து நாடாளுமன்றத்தில் கூறி வருவதோடு தமிழர்களுக்கு எதிராக அச்சுறுத்தல் விடுகின்றார்.

இது நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல சாதாரண அதிகாரிகள் மட்டத்தில் இருக்கின்றது என்பதற்கு ஒரு உதாரணமே. அண்மையில் கொழும்பு மகசின் சிறைச்சாலையில் நடந்த வேதனைக்குரிய சம்பவம் பெரும் பான்மை எனும் இனவாத சிந்தனை அகலாத வகையில் இனங்களுக்கிடையில் உறவு துருவமாகவே இருக்கும்.

அதேவேளை, ஆட்சியாளர்கள் அரசு மீது தமிழர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களையும், கைதுசெய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்படும், புதிய பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்படும், அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று கூறிக் கொண்டிருக்காது அதனை அவசரமாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்றுள்ளது.

## பால் புரைக்கேறி ...........

பிறந்து நான்கு நாள்க ளேயான பெண் சிசு ஒன்று பால் புரைக்கேறி உயிரிழந் துள்ளது.

இந்தச் சோகம் மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த குடும்ப மொன்றுக்கே நேர்ந்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 9ஆம் திகதி பிரசவம் நடந்த நிலையில், தாயும் சிசுவும்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மருத்துவமனை விடுதியில் தங்கியிருந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8.45 மணியளவில் பால் கொடுத்து விட்டு தாய் அந்தப் பெண் சிசுவை உறங்க வைத்

## இலங்கை-இந்திய ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்போது இந்தக் கேரள கஞ்சாவைக் கரைக்குக் கொண்டு வர முயன்ற இலங்கை மீனவர்கள் ஐவரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 10 பேரும் சான்றுப் பொருட்களுடன் கற்பிட்டிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## பயங்கரவாத...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தடைச் சட்டம் நடைமுறையில் இருக்க வேண்டும்.

- இவ்வாறு அமைச்சரும் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவுமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக வடக்கிலிருந்து ஆரம்பமாகியுள்ள கையெழுத்துப் போராட்டத்துக்கு எமது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஜெனிவா மாநாடு ஆரம்பமாகியுள்ள நிலையில் நாடு முழுவதிலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று போராட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ள கருத்து பலத்தை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைக்கு எதிரான ஜெனிவா நிகழ்ச்சி நிரலின் பிரகாரம்தான் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இது தொடர்பில் அரசு மிகவும் அவதானத்துடன் செயற்படும் - என்றார்.

## தமிழ் அரசியல்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்.

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச்செய்யக் கோரி யாழ்ப்பாணத்திலிருந்து அம்பாந்தோட்டை வரை ஆரம்பமாகியுள்ள கையெழுத்துப் போராட்டத்துக்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி முழுமையான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இந்தப் போராட்டத்தில் எமது கட்சியினர் நேரடியாகப் பங்கேற்பார்கள்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவோம் என்று அரசு நாடாளுமன்றத்தில் வாக்குறுதிகூட வழங்கியுள்ளது. எனினும், அதை மீறி அரசு செயற்படுகின்றது. இது நாட்டுக்கு நல்லதல்ல - என்றார்.

## இரண்டு வருட ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நீடிக்கக்கூடும். - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இலங்கையில் உணவு மற்றும் போசாக்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தேசிய திட்டமொன்று நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியு றுத்தியுள்ளார்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கை உறுதிப்படுத்தும் கிராமிய பொருளாதார மறுமலர்ச்சி நிலையங்களை வலுவூட்டுவதற்கான பல்துறை ஒருங்கிணைந்த பொறிமுறையொன்றைஜனாதிபதிநேற்று ஆரம்பித்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி, விவசாயத்தை நவீனமயப்படுத்தி உற்பத்தி மற்றும் போட்டித்தன்மையை அதிகரிக்க முடியும் என்றும், இதன்மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டும் துறையாக விவசாயத்தை மாற்ற வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

உலகின் உணவு நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, இலங்கை எதிர்நோக்கும் உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு திட்டமிட்டு ஒருங்கிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க, உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கை உறுதிப்படுத்தும் அரசின் புதியவேலைத்திட்டத்துடன்அனைவரும் கைகோர்க்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இன்று உலகம் முழுவதும் உணவு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. உக்ரைன் போர் காரணமாக, இலங்கைக்குத் தேவையான கோதுமை கிடைக்கவில்லை.

இது இலங்கை போன்ற சிறிய நாடுகளைப் பெரிதும் பாதிக்கின்றது. இப்போது இந்தியா உணவு ஏற்றுமதியை நிறுத்திவிட்டது. சீனாவும் குறைத்துவிட்டது. இந்த நிலைமை இந்த டிசம்பரில் முடிவுக்கு வராது.

எனவே, இந்த நிலை இன்னும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கக்கூடும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

## மனித உரிமையை...........

.(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வடக்கு - கிழக்கு ஒருங்கி ணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நீதிக்கான மக்கள் அமைப்பால் வவுனியா - குருமன்காட்டு சந்தியில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மனித உரிமை செயற்பாட்டாளர்களைத் துன் புறுத்துவதை நிறுத்து, கருத்துச் சுதந்திரம் எங்கள் உரிமை, நடமாடும் சுதந்திரம் எங் கள் உரிமை போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளைப் போராட்டக் காரர்கள் ஏந்தியிருந்தனர்.

அமைதியாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருகை தந்த மக்கள் பங்கேற்றிருந்தனர்.

தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற பெயரை மட்டும் மாற்றிவிட்டு தேசிய பாதுகாப்புச் சட்டம் என்ற ஒன்றைக் கொண்டுவர முயற் சிக்கப்படுகின்றது. இந்தச் சட்டம் நிச்சயமாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விடவும் மோசமானதாக இருக்க வாய்ப்புள்ளது.

சர்வதேசத்தை ஸ்ரீலங்கா ஏமாற்ற முயற்சிக்கும் அதேநேரம், அரசுக்கு எதிராக மக்கள் குரல் கொடுக்க முடியாதவாறு பாதுகாப்பு மிக்க பலமான அரணை நிறுவிக்கொள்ள முயற்சிக்கின்றது -என்றார்.

## அரச அடக்கு ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போராட்டக்காரர்கள், மனித உரிமைகளுக்கு மதிப்பளி, எமது நிலம் எமக்கு வேண்டும், பயங்கரவாத தடைச் சட்டதை நீக்கு, வடக்கு - கிழக்கில் மனித உரிமைகாவலர்களைஅச்சுறுத்துவதை நிறுத்து, அரசே மனித உரிமை அனைவருக்கும் சொந்தமானது போன்ற பதாகைகளைத் தாங்கி நின்றனர்.

## சர்வதேசத்தை...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கே.வி.தவராசா. இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் தெரிவித்துள்ளதாவது:-

ஸ்ரீலங்காவில் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் நிலையில், அதற்குப் பலத்த கண்டனங்கள் எழுந்துள்ளன. அதையடுத்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடரில் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ஸ்ரீலங்கா கொண்டுவரும் என்று வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா அரசால் 1947ஆம் ஆண்டு 25ஆம் இலக்கச் சட்டமாகக் கொண்டுவரப்பட்ட பொதுக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் நடைமுறையில் இருந்த போது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்காமல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பெயரை மாற்றி தேசிய பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரில் புதிய சட்டத்தைக் கொண்டுவர உத்தேசித்துள்ளமை பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு புதிய பெயர் வைப்பதே தவிர வேறு எந்த மாற்றமும் இருக்கப்போவதில்லை.

கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பெயர் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்று மாற்றப்பட்டுசட்டவரைவுகள்நிறைவடைந்திருந்த நிலையில், 2020ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விடவும் மிக மிக மோசமானதும், கொடூரமானதுமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கிடப்பில் போடப்பட்டது.









காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தாமதமே அரச சேவை

தாமதம் என்றால் அதுதான் நமது அரசதுறைச் செயற்பாட்டுக்கு மறு பெயர் போலும்.

நாட்டின் இன்றைய சீரழிவு நிலைமைக்கு அதுவும் ஒரு காரணம். உரிய வேளையில், உரியதைச் செய்யாமல் இழுத்தடித்து, கோட்டை விடுவதில் நமது அரச துறை சேவைக்கு நிகர் இல்லை.

பழைய ஜனாதிபதி பதவி விட்டு விலகி இரண்டு மாதங்களாகிவிட்டன. இப்போதுதான் அதையொட்டிய நடவடிக்கை அறிவிப்பு ஒன்று அரச செயலகங்கள், பிரதேச செயலகங்கள் போன்றவற்றுக்கு வந்திருக்கின்றன.

ஜனாதிபதி ஒருவர் பதவி துறந்தமையுடன் – புதிய ஜனாதிபதி பதவியேற்புடன் – அதுவரை இருந்த அமைச்சரவை செயலிழந்து விடும். பிரதமரிலிருந்து புதிய அமைச்சரவையை புதிய ஜனாதிபதியே நியமிப்பார். அதன் பின்னரே அவர்கள் பதவி ஏற்பர். அமைச்சுக்களின் செயலாளர் கூட அப்படித்தான்.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழு, பிரதேச ஒருங்கிணைப்பு குழு போன்றவற்றின் தலைமைப் பதவிகள், இணைத் தலைமை பதவிகள் கூட அப்படித்தான். புதிய ஜனாதிபதி தலைமையிலான நிர்வாகம் அந்த நியமனங்களைச் செய்வதற்குத் தாமதமானாலும் கூட, பழைய நியமனங்கள், பதவிகள் அதுவரை செல்லுபடியாகப் போவதில்லை.

ஆனால், இதில் விசேடம் என்னவென்றால், இவ்விவகாரத்தில் உள்ள குழப்ப நிலையை – கருத்துநிலை மயக்கத்தைப் பயன்படுத்தி, அத்தகைய பதவி நிலையில் இருந்தோர், தாங்கள் அப்படி அத்தகைய பதவிகளில் நீடிக்கின்றார்கள் என்று 'பந்தா' காட்டி, செயற்பட்டமைதான். இது வடக்கிலும் தாராளமாக நிகழ்ந்தது.

புதிய ஜனாதிபதி பதவியேற்ற பின்னரும் – அவர் புதிய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களை நியமிக்க முன்னரும் – அந்தப் பதவிகளில் தாங்கள் நீடிப்பவர்கள் போன்ற செயற்பாடு வடக்கில் இடம் பெற்றமை மறைக்கக் கூடியதல்ல.

இப்போது பழைய நியமனங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன, புதிய நியமனங்கள் இடம்பெற்ற பின்னர் அது தொடர்பான வழிகாட்டல்கள் வழங்கப்படும் என பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மாயாதுன்னு சுற்றறிக்கை அனுப்பி நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டிய சூழல்.

அதுவும் கூட பழைய ஜனாதிபதி பதவி விலகி இரண்டு மாதங்களின் பின்னர் – அதுவும் பல மாவட்டங்களில் புதிய ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் புதிதாக நியமிக்கப்பட்டு விட்டார்கள் என்ற செய்திகள் வெளியான பின்பு – நித்திரை கொண்டு எழுந்து வந்து இப்போது சுற்றுநிரூபம் அனுப்புகிறார் உரிய அமைச்சின் செயலாளர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு ஆகிய ஆறு தமிழ் மாவட்டங்கள் மற்றும் பொலன்னறுவையைத் தவிர்ந்த 18 மாவட்டங்களுக்கும் புதிய மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர்கள் நியமிக்கப்பட்டு விட்டார்கள் என்ற செய்திகள் வெளியான பின்னர் தான், பழையவர்கள் பதவியில் இல்லை என்ற சுற்றுநிரூபம் வருகின்றது.

சரி. இந்த இடைப்பட்ட காலத்தில் – இரண்டு மாதங்களில் – மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர்கள் என்ற பெயரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்னவாகப் போகின்றன, அவர்கள் சார்பில் செலவிடப்பட்ட எரிபொருள் அலவன்ஸ் மற்றும் செலவினங்களை எப்படி அங்கீகரிப்பார்கள்? ஆண்டவனுக்கு தான் வெளிச்சம்.

# இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை இறக்குமதித் தடையில் திருத்தம்!



அமைச்சர் ரமேஷ் பத்திரன அறிவிப்பு

அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக சில இறக்குமதிகளுக்கு விதிக்கப்பட்ட தடை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை திருத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின் போது, அமைச்சர் ரமேஷ் பத்திரன இதனைத் தெரிவித்தார்.

தற்காலிக நடவடிக்கையாக சில பொருள்களின் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் ரமேஷ் பத்திரன மேலும் தெரிவித்தார்.

அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக இறக்குமதி கட்டுப்பாடு அமுலில் உள்ளன எனவும், அது தீர்க்கப்பட்டதும் அனைத்து கட்டுப்பாடுகளும் நீக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

இறக்குமதித் தடை காரணமாக சில துறைகளில் தடை ஏற்படுத்திய தாக்கத்தை கருத்தில் கொண்டு, அரசாங்கம் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை திருத்தம் மேற்கொள்ளும் எனத் தெரிவித்தார்.

# போராட்டங்களில் ஈடுபட்டுள்ள இளைஞர்களை தடுத்து சித்திரவதை செய்வதை ஏற்கமுடியாது!

ஆதிவாசிகளின் தலைவர் காட்டம்



போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்களை தடுத்து வைத்து உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் சித்திரவதை செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னியலத்தோ தெரிவித்துள்ளார்.

தம்பன கொடபாகினிய கிராமத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர் செயற்பாட்டாளர் வசந்த முதலிகேவுக்கு எதிரான தண்டனையை மீள்பரிசீலனை செய்யுமாறு அவர் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தவறு நடந்திருந்தால் தகுந்த தண்டனை வழங்குவது நியாயம், ஆனால் அவர்களை நீண்ட காலம் காவலில் வைத்து உடல் மற்றும் மன ரீதியான சித்திரவதைகளுக்கு உள்ளாக்குவது ஏற்புடையதல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தாமரைக் கோபுரச் செயற்பாடுகள் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டன!



தெற்காசியாவிலேயே மிக உயரமான கட்டடமாக நிர்மாணிக்கப்பட்ட தாமரை கோபுரத்தின் செயற்பாடுகளை இன்று (புதன்கிழமை) முதல் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இன்று முதல் தாமரை கோபுரம் பொதுமக்களின் பாவனைக்காக திறக்கப்படவுள்ள நிலையில், 500 ரூபா மற்றும் 2 ஆயிரம் ரூபா கட்டணத்தில் நுழைவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொண்டு உள்ளே செல்ல முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டவர்களுக்கு நுழைவுச்சீட்டுக் கட்டணம் 20 அமெரிக்க டொலர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தாமரைக் கோபுரத்தின் நிர்மாணப் பணிகள் இவ்வருடம் பெப்ரவரி 28 ஆம் திகதி நிறைவடைந்துள்ளதுடன், சீன நிறுவனம் வழங்கிய கடனைச் செலுத்தும் பணியை 2024 ஆம் ஆண்டு நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

தாமரைக் கோபுர முதலீட்டில் இதுவரை உள்நாட்டு முதலீட்டாளர்களும் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் இணைந்துள்ளதுடன், 22 முதலீட்டாளர்கள் ஒப்பந்தத்தில் ஈடுபட விருப்பம் தெரிவித்துள்ளனர் எனத் தாமரைக் கோபுர தனியார் நிறுவனத்தின் பிரதம நிர்வாக அதிகாரி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இந்த ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் 15 வெள;வேறு திருவிழாக்களுக்கான முன்பதிவுகள் கிடைத்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் முதல் கட்ட செயற்பாடுகள் 2024 இல் ஆரம்பிப்பு!

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் முதற்கட்ட நிர்மாணப் பணிகள் நிறைவடைந்து 2024 இல் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் என இந்தத் திட்டத்தின் முதலீட்டாளர்களான கொழும்பு மேற்கு சர்வதேச முனையம் தனியார் நிறுவனம் தெரிவித்துள்ளது.

துறைமுக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் இடம்பெற்றது. இதன்போதே இந்த விடயம் தொடர்பாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. 70 கோடி டொலர்கள் செலவில் கடந்த ஆண்டு செப்ரெம்பர் 23ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கட்டுமானப் பணிகளை 2025ஆம் ஆண்டு நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பிரிட்டனில் ராணியின் இறுதிச்சடங்கில் ஐந்நூறு உலகத் தலைவர்கள் பங்கேற்பு

## ட்ரம்ப் உள்பட சில நாட்டுத் தலைவர்களுக்கு அழைப்பு இல்லை

லண்டன்,செப்.14

இங்கிலாந்து ராணியின் இறுதிச் சடங்கில் ஐந்நூறு உலக தலைவர்கள் பங்கேற்பர் என எதிர்பார்க்கப் படுகின்றது.

பிரித்தானியாவில் கடந்த பல ஆண்டுகளுக்கு பின்னர் சர்வதேச தலைவர்கள் பலர் கலந்து கொள்ளும் நிகழ்வாக இது அமைகிறது.

இதில் ரஷ்யா, பெலாரஸ் மற்றும் மியான்மர் ஆகிய மூன்று நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை என்பதுடன், ஈரானுக்கு தூதரகம் ஊடாக மட்டும் மரி யாதை செலுத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், விருந்தினர்கள் பட்டியல் இதுவரை இறுதி செய்யப்படவில்லை என்றாலும், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் அவரது மனைவி ஜில் பைடன் கண்டிப்பாக இடம் பெறுவார்கள் என்பது உறுதி யாகியுள்ளது. உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் லண்டனுக்குப் புறப்படும் சூழலில் இல்லை என தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே, இறுதிச்சடங்கில் பங்கேற்கும் தலைவர்கள் அனைவருக்கும் ஞாயிறன்று மாலை பக்கிங்ஹாம் அரண்மனையில் மன்னர் சார்ள்ஸ் தலைமையில் விருந்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஐரோப்பாவில் உள்ள அனைத்து அரச குடும்பத்தினரும் ராணியாரின் இறுதிச்சடங்கில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜோ பைடன் மட்டுமின்றி கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, நியூசிலாந்து பிரதமர் ஜசிந்தா, ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ் உள்ளிட்ட குறிப்பிட்ட தலைவர்கள் ஏற்கனவே வருகையை உறுதி செய்துள்ளனர்.

அது மட்டுமின்றி, முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் இறுதிச் சடங்குகளில் பங்கேற்க வாய்ப்பிருப்பதாக கூறப்படுகிறது. ஆனால் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்புக்கு அழைப்பு விடுக் கப்படவில்லை என்றே தகவல் வெளியாகியுள்ளது.

சீனா ஜனாதிபதி ஜி ஜின்பிங் வருகை சந்தேகம் என கூறப்பட்ட நிலையில், அவருக்குப் பதிலாக துணை ஜனாதிபதி பங்கேற்கலாம் என கூறப்படுகிறது. மேலும், இந்தியா, பிரேசில் உட்பட வட கொரியா தலைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.







# லண்டனை வந்தடைந்தது ராணியின் பூதவுடல் பேழை

லண்டன்,செப்.14

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத் தின் உடல் அடங்கிய பேழை லண்டனை வந்தடைந்தது.

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத் உடல்நலக் கோளாறுகளால் காலமானார். ஸ்கொட்லாந்தில் உள்ள பால்மோரல் அரண்ம னையில் அவரது உயிர் பிரிந்தது. இதையடுத்து, அவரது மகன் மூன்றாம் சார்லஸ் அடுத்த ம ன்னராக அறிவிக்கப்பட்டார்.

இந்நிலையில் ஸ்கொட்லாந்திலிருந்து லண்டன் கொண்டு வரப்பட்ட ராணியில் உடல் பகிங்ஹாம் அரண்மனைக்கு இரு நாள்கள் வரை வைக்கப்படும். மறுநாள் ஊர்வலமாக புறப்பட்டு, வெஸ்ட்மினிஸ்டர் அரண்மனையில் பொதுமக் கள் பார்வைக்குவைக்கப்படும். இறுதி சடங்கு நடக்கும்தினம் வரை, ராணியின் உடல் வெஸ்ட்மினிஸ்டர் அரண்மனையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் 19ம் தேதி ராணியின் இறுதி சடங்கு நடக்கிறது. இதில், அரசகுடும்பத்து உறுப்பினர்கள், உலக நாடுகளின் தலைவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

அதன்பின், லண்டனுக்கு வெளியே விண்ட்ஸர் அரண்மனையில் உள்ள செயின்ட் ஜோர்ஜ் தேவாலயத்தில், ராணியின் கணவர் இளவரசர் பிலிப் உடல் புதைக்கப்பட்ட இடத்திற்கு அருகே ராணி எலிசபெத்தின் உடல் புதைக்கப்பட உள்ளது.

இறுதி சடங்கு உள்ளிட்ட அரச குடும்பத்து சம்பிரதாயங்களை பகிங்ஹாம் அரண்மனை ஊழியர்கள் செய்து வருகின்றனர்.




# கென்யாவின் ஐந்தாவது அதிபராக வில்லியம் ரூட்டோ பதவியேற்றார்



கென்யா, செப்.14

கென்யாவின் ஐந்தாவது அதிபரானார் வில்லியம் ரூட்டோ. ஆப்பிரிக்க நாடான கென்யாவில் அதிபர் தேர்தல் கடந்த மாதம் 9 ஆம் திகதி நடைபெற்றிருந்தது. இந்தத் தேர்தலில் வெற்றி பெறு வார் என்று எதிர்பார்க்கப்பட்ட கென்யாவின் முன்னாள் பிரதம ரும், மூத்த அரசியல்வாதியுமான ரெய்லா ஒடிங்கா இரண்டு வீத வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியிருந்தார்.

அதன் பின்னர், துணை அதிபராக இருந்த ரூட்டோ கென்யாவின் அதிபராக அறிவிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஒடிங்காவின் ஆதரவாளர்கள் தலைநகர் நைரோபி யில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், இந்த தேர்தல் வெற்றியானது செல்லாது என்ற அதிகாரப்பூர்வ முடிவுகளுக்கு எதிரான கொண்டுவரப்பட்டிருந்த வழக்குகளை விசாரித்த கென்யா உச்ச நீதிமன்றம் அந்த மனுக் களை கடந்த வாரம் நிராகரித்தது.

இந்நிலையில், வில்லியம் ரூட்டோ நேற்றையதினம் கென்யாவின் 5 ஆவது அதிபராக பதவியேற்றார்.

இதன் பின்னர் இடம்பெற்ற பதவியேற்பு விழாவில் முன்னாள் அதிபர் உஹூரு கென்யாட்டாவும் வில்லியம் ரூட்டோவும் கைகு- லுக்கி பேசிக் கொண்டது மக்களிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தி யிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

# ஆர்மீனியா – அஜர்பைஜான் மோதல் உடனடியாக நிறுத்துமாறு வற்புறுத்து

## ஐரோப்பிய ஒன்றியம் விடுத்தது

ஆர்மீனியா மற்றும் அஜர்பைஜான் இடையே சமீப காலமாக இடம்பெறுகின்ற மோதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு மற்றும் பாதுகாப்பு கொள்கைக்கான உயர் பிரதிநிதி ஜோசப் பொரெல் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஆர்மீனியாவிற்கும் அஜர் பைஜானுக்கும் இடையே பயங்கரமான ஆயுத மோதல் கள் இடம்பெற்றன. இந்த தாக்குதலில் குறைந்தது 49 வீரர்கள் கொல்லப்பட்டிருக்கன்றனர் என ஆர்மேனிய நாட்டுப் பிரதமர் நிகோல் பஷின்யான் தெரிவித் தார். இந்த நிலையில் ஆர்மீனியா மற்றும் அஜர்பைஜான் இடையேயான சமீபத்திய முன்னேற்றங்கள் ஆபத்தான விரிவாக்கத்தை பிரதிநிதித்துவ படுத்துவதால் அவை நிறுத்தப்பட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு மற்றும் பாதுகாப்பு கொள்கைக்கான உயர் பிரதிநிதி ஜோசப் பொரெல் நேற்றையதினம் அறிவிப்பொன்றை வெளியிட்டிருந்தார்.

அத்துடன் பகைமைகளை இருதரப்பும் உடனடியாக நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்ப வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம் எனத் தெரிவித்த அவர், ஐரோப்பிய ஒன்றியம் இரு தரப்புடனும் தொடர்பு கொள்கிறது என்றும் குறிப் பிட்டார்.

# கோவாவிலும் காங்கிரஸ் கட்சி கரைகிறது 8 எம்.எல்.ஏக்கள் பா.ஜ.கவுக்குப் பாய்ச்சல்



கோவாவில் முன்னாள் முதலைமைச்சர் உள்பட காங்கிரஸைச் சேர்ந்த 8 எம்.எல்.ஏக்கள் பா.ஜகவில் இன்று இணைந்துள்ளனர். பனாஜி, கோவாவில் முதலைமைச்சராக பிரமோத் சாவந்த் தலைமையில் பா.ஜ.க. ஆட்சி செய்து வருகிறது. எதிர்க்கட்சியாக இருந்து வரும் காங்கிரஸ் கட்சியில் உள்ள 8 எம்.எல்.ஏ.க்கள் இன்று கோவா முதலைமைச்சரை நேரில் சென்று சந்தித்துப் பேசினர். அவர்களில் முன்னாள் முதலைமைச்சர் திகம்பர் காமத், எதிர்க்கட்சி தலைவர் மைக்கேல் லோபா ஆகியோரும் அடங்குவர்.

அவர்கள்தவிர, காங்கிரஸ்எம்.எல்.ஏ.க்களான தெலிலா லோபோ, ராஜேஷ் பல்தேசாய், கேதர் நாயக், சங்கல்ப் அமோன்கர், அலெக்சோ செகீரா மற்றும் ருடால்ப் பெர்னாண்டஸ் ஆகியோரும் கோவா முதலைமைச்சரைச் சந்தித்தனர். இதன்பின்னர், காங்கிரஸ் சட்டசபை கூட்டம் நடத்தி ஆலோசனை செய்து விட்டு செய்தியாளர்களிடம் பேசிய மைக்கேல் லோபோ, நாங்கள் பா.ஜ.க.வில் இணைந்து விட்டோம். பிரதமர் மோடி மற்றும் கோவா முதலைமைச்சர் பிரமோத் சாவந்த் கரங்களை வலுப்படுத்த போகிறோம் என கூறியுள்ளார்.

பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசை எதி கொள்ள காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந் தலைமையிலான இந்திய ஒற்றுமை யாத்திரையை காங்கிரஸ் கட்சி மேற்கொண்டுள்ள தருணத்தில் இந்நடவடிக்கையை காங்கிரஸார் எடுத்து உள்ளனர் சமீப நாள்களாக காங்கிரஸில் இருந்து வெளியேறு தலைவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது மூத்த தலைவரான குலாம் நபி ஆசாத் காஷ்மீரில் காங்கிரஸில் இருந்து விலகியதும் அவருக்கு அதரவா முக்கிய பொறுப்புகளில் இருந்து அடுத்தடுத்து பல விலகினர்.

கடந்த 4 ஆம் திகதி குஜராத் இளைஞர் காங் கிர தலைவர் வகேலா விலகினார். அதற்கு முன் கட்சி யில் இருந்த ராஜீந்தர் பிரசாத் கடந்த 2 ஆம் திகதி அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து பதவியில் இருந்து விலகினார். இந்நிலையில், கோவா காங்கிர எம்.எல்.ஏக்களும் கட்சியில் இருந்து விலகி பா.ஜ.கவில் சேர்ந்து தலைமைக்கு அதிர்ச்சி அளித்துள்ளனர்.

# தொடர் நடைபயணம் மேற்கொள்ளும் ராகுலின் கால்களில் கொப்புளங்கள்!

## அதனால் நாளை அவர் நடைக்கு ஓய்வு



திருவனந்தபுரம்,செப்.14

தொடர் நடைபயணம் மேற்கொண்டுள்ள ராகுல்காந்தியின் கால்களில் கொப்புளங்கள் ஏற்பட்டுள்ளன. அதனால் ராகுல்காந்தி நாளை ஓய்வு எடுக்கிறார்.

கடந்த 7 ஆம் திகதி தொடங்கிய அவரின் பாதயாத்திரை இன்றுடன் 8 ஆவது நாளை எட்டியுள்ளது.. அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி இந்தியா முழுவதும் ஒற்றுமை யாத்திரை மேற்கொண்டுள்ளார். இந்தியாவின் தென்கோடி முனையான கன்னியாகுமரி, காந்தி மண்டபம் முன்பிருந்து கடந்த 7 ஆம் திகதி அவரது பாதயாத்திரை பயணம் தொடங்கியது. இதனை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தேசிய கொடி வழங்கி தொடங்கி வைத்தார்.

12 மாநிலங்கள், 2 யூனியன் பிரதேசங்கள் வழியாக 150 நாள்கள் நடைபெறும் இந்த நடைபயணம் காஷ்மீரில் நிறைவு பெறுகிறது. தமிழகத்தில் ராகுலின் நடைபயணம் 4 நாள்கள் நடந்தது. கடந்த 11 ஆம் திகதி முதல் கேரள மாநிலத்தில் ராகுல் காந்தி பாதயாத்திரை மேற்கொண்டுள்ளார். '

நேற்று அவர் திருவனந்தபுரம், கணியாபுரத்தில் இருந்து பாதயாத்திரையைத் தொடங்கினார். அப்போது மழைபெய்து கொண்டிருந்தது. அவர் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது தொண்டர்களுடன் நடந்தார். அவருக்குக் குடை பிடிக்க வந்த உதவியாளர்களைத் தடுத்து, அதனை தன்னோடு வரும் தொண்டர்களுக்கு அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

காலை 10.30 மணிக்கு அவர் மாமம் எஸ்.எஸ்.பூஜா கன்வென்சன் சென்டரை சென்றடைந்தார். அங்கு பாதயாத்திரை குழுவினர் ஓய்வெடுத்தனர். பின்னர் மாலை 4 மணிக்கு மீண்டும் மாமத்தில் இருந்து தொடங்கிய பாதயாத்திரை இரவு 8 மணி அளவில் கல்லம்பலத்தில் நிறைவடைந்தது. அங்கு இரவு தங்கிய ராகுல் காந்தி மற்றும் குழுவினர் இன்று காலை 7.30 மணிக்கு கல்லம்பலத்தில் இருந்து மீண்டும் பாதயாத்திரையை தொடங்கினர்.

முதல் நிகழ்ச்சியாக பாதயாத்திரை குழு, சிவகிரி மடத்திற்கு சென்றனர். அங்கு ராகுல்காந்தியை கோவில் நிர்வாகிகள் வரவேற்றனர். பின்னர் அவர், சமூக சீர்திருத்த வாதியும், துறவியுமான ஸ்ரீநாராயணகுருவுக்கு மரியாதை செலுத்தினார். பின்னர் நடந்த தீபாராதனையிலும் பங் கேற்றார். அவருடன் காங்கிரஸ் தொண்டர்களும் ஸ்ரீநாராயணகுருவை வழிபட்டனர்.

முன்னதாக தனது ஒற்றுமை பயணம் பற்றி ராகுல் காந்தி கூறும்போது, இந்து மதத்தின் பிரதான வார்த்தை ஓம் சாந்தி. ஆனால் இந்துக்களின் காவலன் என்று கூறிகொள்ளும் கட்சி, ஓம் சாந்தி என்ற வார்த்தைக்கு எதிராக நடந்து கொள்கிறது. அவர்கள் மதநல்லிணக்கத்தை கெடுக்கிறார்கள். ஒற்றுமையை சீர்குலைக்கிறார்கள். மக்களை பிளவுபடுத்துகிறார்கள். இதனை தடுக்கவும், மக்களை ஒன்றுபடுத்தவுமே நான் ஒற்றுமை பயணத்தை மேற்கொண்டுள்ளேன் என்றார்.

சிவகிரி மடத்தில் வழிபாடு முடிந்த பின்னர் ராகுல் காந்தியின் பாத யாத்திரை மீண்டும் தொடங்கி கொல்லம் மாவட்ட எல்லையான கடம்பாட்டு கோணத்தை சென்றடைந்தது. அங்கு ஓய்வெடுக்கும் ராகுல் காந்தி, மாலை 4 மணிக்கு மீண்டும் பாதயாத்திரையை தொடங்குகிறார்.

ராகுல் காந்தி 8 நாள்களாக தொடர்ந்து நடந்து வருவதால் அவரது கால்களில் கொப்புளங்கள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பாக கருத்துப் பதிவிட்டுள்ள ராகுல் காந்தி, காலில் கொப்புளங்கள் ஏற்பட்டாலும் எனது ஒற்றுமைப் பயணம் தொடரும் என்று கூறியுள்ளார். இந்த நிலையில் ராகுலின் பாதயாத்திரையை ஒருங்கிணைக்கும் குழுவினர் ராகுல் காந்தி நாளை ஓய்வெடுக்க உள்ளதாக கூறியுள்ளனர். இதனை கேரள மாநில காங்கிரஸ் நிர்வாகிகளும் தெரிவித்தனர். நாளை ராகுல் காந்தி ஓய்வு எடுப்பதால் கட்சியின் நிர்வாகிகள் கூட்டம் நடைபெறும் எனக்கூறியுள்ளனர். இதனால் நாளை பாதயாத்திரைக்கு ஓய்வு கொடுக்கும் ராகுல் காந்தி நாளை மறுநாள் கொல்லம் மாவட்டத்தில் பாதயாத்திரை மேற்கொள்கிறார்.



# சவுதி இளவரசருக்கு இந்தியா வருமாறு பிரதமர் மோடியின் சார்பில் வேண்டுதல்

சவுதி, செப்.14

இந்தியாவிற்கு வருகைதருமாறு சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானுக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சவுதி அரேபியா தேசிய தினம் வரும் 23 ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது. இந்நிலையில் இரு நாள் அரசு முறைப்பயணமாக சவுதி அரபேயா சென்றுள்ள இந்தியமத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், அந்நாட்டு பட்டத்து இளவரசர் முகமது பின் சால்மனை கடந்த ஞாயிறன்று ஜெட்டா நகரில் சந்தித்து பேசினார். அப்போது பிரதமர் மோடி எழுதிய கடிதம் ஒன்றையும் வழங்கினார்.

அதில் இந்தியப் பிரதமர் மோடி சவுதி அரேபியா தேசிய தின வாழ்த்துத் தெரிவித்தமையுடன், மேலும் இந்தியா வருமாறு சவுதி பட்டத்து இளவரசருக்கு அழைப்பும் விடுத்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

முன்னதாக சவுதி அரேபியா - இந்தியா இடையே இருதரப்பு ஒத்துழைப்பு கவுன்சில் ஏற்படுத்தப்பட்டது. அதனுடைய செயல்பாடுகள் குறித்து இருவரும் விவாதித்தனர். பின்னர் சவுதி அரேபியா வெளியுறவு அமைச்சர் பைசல் பின் பர்ஹானை மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்துப் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்ததில் ஜம்மு—காஷ்மீரில் 11 பேர் மரணம்

ஸ்ரீநகர்,செப்.14

ஜம்மு-காஷ்மீரில் பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் 11 பேர் உயிரிழந்தனர்.

ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் பூஞ்ச் மாவட்டத்தில் இருந்து கலி மைதான் என்ற பகுதி நோக்கி இன்று காலை பஸ் சென்றுகொண்டிருந்தது. அந்த பஸ்ஸில் 36 பேர் பயணித்தனர்.

சாஜியன் பகுதியில் உள்ள மலைப்பாங்கான பிராரி நல்ஹா என்ற பகுதியில் சாலையில் சென்றபோது எதிர்பாராத விதமாக பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்தக் கோர விபத்துக் குறித்து தகவலறிந்த பொலிஸார் ராணுவம், உள்ளூர் மக்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர்.

ஆனால், இந்த விபத்தில் பஸ்ஸில் பயணித்த 11 பேர் உயிரிழந்தனர். மேலும் 25 பேர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஜனாதிபதி முர்மு, பிரதமர் மோடி உள்பட பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவையை முன்னெடுக்கின்றது கிழக்குப் பல்கலை

## சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தில் விசேட நிலையம் நிர்மாணித்துத் திறந்து வைப்பு









(சுதா)

மட்டக்களப்பு மக்களுக்கான ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையமொன்று கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிள்ளையாரடியில் அமைந்துள்ள சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பத்துக் கோடி அறுபது லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தின் திறப்பு விழா நேற்று முன்தினம் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்தியஆரம்ப சுகாதார பராமரிப்பு துறையின் துறைத்தலைவர் வைத்தியர் கே.அருளானந்தம் தனது நிலையத்தின் நான்கு பிரதான தொழில்பாடுகள் பற்றி விரிவாக விளக்கமளித்தார்.

ஆரம்ப சுகாதார பராமரிப்பு மற்றும் நோய் முகாமைத்துவம், சௌக்கிய நிலை முன்னேற்றம் மற்றும் நோய் தடுப்பு, கற்பித்தல் மற்றும் பயிற்சி, அத்துடன் ஆராய்ச்சி மற்றும் புதுமைகளை புகுத்தல் எனும் பெரும் பகுதிகள் தொடர்பாகவும் விரிவாக விளக்கினார். பீடாதிபதி கலாநிதி ரீ.சதானந்தன் தனதுரை யில்,இந்நிலையத்தை உருவாக்கிய அனைவரும் பெருமைப்படும் வண்ணமாக இந்த மையம் பணியாற்ற வுள்ளது எனவும் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம் இதனால் பெருமை அடைகின்றதெனவும் குறிப்பிடடார்.

சிறப்புரையாற்றிய கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தனதுரையில் சமூகப் பராமரிப்பில் சேவை, கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி எனும் பெரும் பகுதிகளை உள்ளடக்கி இம்மையத்தின்மூலம் வழிப்படுத்தப்படுவதில் இலங்கை பல்கலைக்கழகங்களில் நாமே முதன்மையானவர்களாக மாறியுள்ளோம் எனக் குறிப்பிடடார்.

மேலும் இம் முழுமையான பராமரிப்பு மையம் கிழக்கு பல்கலைக்கழகத்தின் அடையாளமாக இருந்து பேராசிரியர்களின் சமூகம்சார் சிந்தனைகளை செயல் வடிவமாக்கும் ஓரிடமாக செயற்படும் என்பதில் ஐயமில்லை எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்த பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம், பதில் உபவேந்த வைத்திய கலாநிதி கே.கருணாகரன், முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் திருமதி.காலமதி பத்தராஜா, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாள வைத்தியர் ஜீ.சுகுணன், உதவி பிரதேச செயலாள திருமதி.சுதர்ஷினி, அயல் கிராமங்களின் தலைவர்கள், சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தின் துறை தலைவர், விரிவுரையாளர்கள், கல்விசாரா அலுவலர்கள், மாணவர்கள் எனப் பலரும் பங்குபற்றினர்.

வைத்தியசாலைகள், வைத்திய அதிகாரிகள் பிரிவுகளின் சுகாதார பராமரிப்பு அலகுகள், கிராமமட்ட தாய் சேய் பராமரிப்பு நிலையங்கள் என்பவற்றையும் தாண்டி கிழக்குப் பல்கலைக்கழகம் முழுமையான ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவையை சமூகத்திற்கு வழங்குவதென்பது மட்டக்களப்பு மக்களுக்கு கிடைத்துள்ள பொருங்கொடையாகவே தாம் பார்க்கின்றனர் என நிகழ்வில் கலந்து கொண்ட சமூக ஆர்வலர்கள் பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

# மட்டு. விவசாயிகள் பிரச்சினைகள்; அமரவீரவுடன் வியாழேந்திரன் பேச்சு



மட்டக்களப்பு மாவட்ட விவசா-யிகளின் நலன்கருதி வர்தக வாணிப இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவை நேற்று ஆம் திகதி விவசாய அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் எதிர் நோக்கும்முக்கியபிரச்சினைகளில் ஒன்றான உரப்பிரச்சினை தொடர்பாக விவசாய அமைச்சரை தெளிவுபடுத்தியதுடன் மாவட்ட விவசாயிகளுக்குசுமார்எட்டாயிரம் மெட்ரிக் தொன் யூரியா மற்றும் சுமார் நான்காயிரத்து ஐந்நூறு மெட்ரிக் தொன் (எம்மோபி) குடலப் பசளை தேவைப்பாடாக வுள்ளமை தொடர்பாகவும் அமைச்சருக்குத் தெளிவு படுத்தினார்.

அத்துடன் விவசாயிகளுக்குரிய எரிபொருள் வழங்கல் விடயத்தில் முன்னுரிமை வழங்குவது சம்பந்தமாகவும் கலந்துரையாடியுள்ள இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் எதிர்வரும் நாள்களில் விவசாய அமைச்சரை மட்டக்களப்பிற்கு நேரடியாக கள விஜயத்தைமேற்கொண்டுவிவசாய அமைப்புக்களுடன் நேரடி கலந்துரையாடலையும் மேற்கொள்ள வேண்டினார். தமது வேண்டுகோளிற்கமைய விவசாய அமைச்சர் இம்மாத இறுதிக்குள் மட்டக்களப்பிற்கு வருகை தந்து விவசாயிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பற்கான நடவடிக்கையை முன்னெடுக்க இணங்கியுள்ளார் என மேற்படி சந்திப்பின் பின்னர் வியாழேந்திரன் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தார்.

# மன்னார்தீவுப் பகுதி உள்ள மீனவர் தொடர்ந்தும் பாதிப்பு!

## மன்னார் மீனவ சங்க சமாச செயலாளர் தெரிவிப்பு




மன்னார் தீவு பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மண் அகழ்வு காரணமாக மீனவர்கள் எவ்வாறான பாதிப்புக்களை சந்திக்கின்றார்களோ அந்த பாதிப்புகளையே மன்னார் ஓலைத்தொடுவாய் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட உள்ள இறால் வளர்ப்பு பண்ணையாலும் மீனவர்கள் பாதிப்பை எதிர்நோக்குவார்கள் என மன்னார் மாவட்ட மீனவ சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்–

மன்னார் மாவட்டத்தில் வழங்கப்படுகின்ற பண்ணை வளர்ப்புக்கு குறிப்பாக கடலட்டை, மீன், இறால் வளர்ப்பு போன்றவற்றுக்கு வழங்கப்படுகின்ற அரச காணிகளாக இருந்தாலும் சரி, தனியார் காணிகளாக இருந்தாலும் சரி நாங்கள் ஏற்கனவே குறித்த வளர்ப்புத் திட்டங்களுக்கு எதிரானவர்கள் அல்லர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனால் மேற்படி வளர்ப்புத் திட்டம் வழங்கப்பட்ட முறையில் நிறைய முறைகேடுகள் காணப்படுகின்றன.

ஆரம்பத்தில் சீன கம்பனிகளுக்கு வழங்கப்படுவதாகக் கூறப்பட்ட விடயம் மீனவர்களின் எதிர்ப்பு காரணமாக அந்தப் பகுதி மீனவர்களுக்கு திட்டத்தைப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதனை நாங்கள் வரவேற்கிறோம். குறிப்பாக மன்னாரில் இலுப்பைக்கடவை தொடக்கம் தேவன் பிட்டி வரையிலான சுமார் 200 இற்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகள் இன்று மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

எனினும், இலுப்பைக்கடவை உள்ளிட்ட சில கிராமங்களில் மீனவ மக்களின் எதிர்ப்பு காரணமாக இந்த நடவடிக்கை தடைப்பட்டுள்ளது.

அட்டை வளர்ப்பிற்காக வழங்கப்படுகின்ற காணிகள், மீனவர்கள் எதிர் காலத்தில் கடலை மட்டும் நம்பி இருக்காது கரையோரங்களிலும் தமது வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

அதற்கு அமைவாக பண்ணைத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகவர்கள் யார்? வெளிநாட்டு தலையீடுகள் இருக்கின்றனவா? அல்லது வெளிநாட்டு கம்பெனிகள்உள்வாங்கப்பட்டுள்ளனவா? உள்ளிட்ட கருத்துக்கள் வெளியாகி உள்ளது.

கடலில் பிடிக்கப்படுகின்ற 75 கிராமுக்குக் குறைவான அட்டைகளைப் பெற்று அதனை பண்ணைகளில் விட்டால் அந்த அட்டைகள் பெருகி உற்பத்தியாகும் என்பது உண்மை.

அந்த அந்த கிராம மீனவர்கள் நலம் பெற வேண்டுமாக இருந்தால் அரசு குறித்த திட்டத்தை குறிப்பிட்ட கிராம மீனவர்களுக்கு வழங்க வேண்டும். மாறாக இந்தத் திட்டத்தை வெளி மாவட்டத்துக்கு வெளி நாடுகளுக்கும் வழங்குவதை நிறுத்த வேண்டும்.

மேலும் மன்னார் தீவு பகுதியை எடுத்துக் கொண்டால் இங்கு இடம்பெறுகின்ற நிறைய அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் காற்றாலை மின் உற்பத்தி திட்டம், கனிய மண் அகழ்வு போன்ற விடயங்கள் இடம்பெற்று வருகின்ற போதும் எம்மால் அதற்கு எதிராகப் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கு அப்பால் மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி, ஓலைத்தொடுவாய் பகுதியில் சுமார் 400 ஏக்கர் நிலம் இறால் வளர்ப்புக்கு என வழங்கப்பட உள்ளதாக அறிய முடிகின்றது.

வெளிமாவட்டத்தைச் சேர்ந்த தனியார் ஒருவருக்கு இந்தக் காணி வழங்கப்பட உள்ளது. அது தனி நபருக்கு சொந்தமானது எனக் கூறப்படுகிறது.

இந்தத் திட்டம் நடை முறைப்படுத்தப்படுமாக இருந்தால் மன்னார் தீவு பகுதியில் அதிக நிலப்பகுதியில் கடல் நீர் உள் வாங்கப்பட்டு கடல் நீர் கிராமங்களில் வரும் நிலை ஏற்படும்.

காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதால் மீனவர்கள் எவ்வாறான இடர்களைச் சந்திக்கின்றார்களோ அந்த வகையில் இறால் வளர்ப்பு பண்ணையால் மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

இந்தத் திட்டத்தை யார் முன்னெடுத்தார்களோ அவர்கள் சிந்தித்து செயல்பட வேண்டும்– எனத் தெரிவித்தார்.

# ஒரேயொரு பஸ் சேவையும் கூட பாதை சீரின்மையால் நிறுத்தம்!

## தங்கவேலாயுதபுரத்தின் அவல நிலைமை





(காரைதீவு நிருபர் சகா)

திருக்கோவில் பிரதேசத்திற்கு உட்பட்ட பின்தங்கிய தங்கவேலாயுதபுரம் கிராமத்துக்கான பிரதான பாதை குன்றும்குழியுமாக இருப்பதால் அங்கு சேவையீடுபட்ட ஒரேயொரு பஸ் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது. அக்கரைப்பற்று பஸ் டிப்போவால் திருக்கோவிலில் இருந்து தங்கவேலாயுதபுரம் கிராமத்திற்கான பஸ் சேவை தினமும் இரண்டு தடவைகள் இடம்பெற்று வந்தது.

அக்கரைப்பற்று பொத்துவில் பிரதான பாதையில் தாண்டியடி சந்தியிலிருந்து தங்கவேலாயுதபுரம் செல்வதற்கான 12 கிலோ மீற்றர் தூர ஒரேயொரு பிரதான வீதி மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது. மண் ஏற்றும் கனரக வாகனங்கள் தொடர்ச்சியாக இப்பாதையை பயன்படுத்தியதன் காரணமாக இப் பாதை இவ்வாறு படுமோசமாக பாதிக்கப்பட்டிருக்கலாமெனக் கூறப்படுகிறது.

இதனால் இருந்த ஒரேயொரு பஸ் சேவையும் நிறுத்தப்பட்டு இருக்கின்றது . இதனால், மாணவர்களும் விவசாயிகளும் பொதுமக்களும் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். அவர்கள் இந்த பன்னிரண்டு கிலோ மீற்றர் தூரத்தை நடந்தே பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி திணைக்களம் இந்த பாதையை செப்பனிட பத்தாயிரம் கிலோ மீட்டர் வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கேள்வி அறிவித்தல் கோரியது. ஆனால் அரசாங்கத்தின் சமகால பொருளாதார நெருக்கடி காரணமாக அது கைவிடப்பட்டது.

இப் பிரதேசத்தில் 12,000 ஏக்கர் வயல் காணிகளும் இருக்கின்றன. அவற்றுக்கு செல்கின்ற விவசாயிகள் மக்கள் கால்நடையாக செல்ல வேண்டியிருக்கின்றது.

இந்த அவல நிலையை கருத்தில் கொண்டு திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் ஏனைய நிறுவனங்களிடம் இருந்து நிதி பெற்று இந்த வீதியைச் செப்பனிட நடவடிக்கை எடுத்து வருகிறார் எனத் தெரிகின்றது.

தங்கவேலாயுதபுரம் பாடசாலைக்கு செல்கின்ற மாணவர்களும் ஆசிரியர்களும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கின்றனர் என திருக்கோயில் வலய கல்வி பணிப்பாளர் யோகேந்திரா ஜெயச்சந்திரன் தெரிவித்தார். தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடிச்சாறு செல்லுகின்ற மக்களும் கால்நடையாகச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. விரைவில் இதற்கான தீர்வு கொடுக்கப்படும் என்று திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் செய்தார்கள்.

# காத்தான்குடி ஏத்துக்கால் கடற்கரையில் கடலரிப்பைக் கட்டுப்படுத்த நடவடிக்கை






காத்தான்குடி ஏத்துக்கால் கடற்கரைப் பகுதியில் ஏற்பட்டு வரும் கடலரிப்பின் காரணமாக மீனவர்களின் வாடிகள் மற்றும் கட்டடங்கள் பாரிய ஆபத்தை எதிர் நோக்கியுள்ள நிலையில் காத்தான்குடி நகரசபையும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களமும் இணைந்து கடலரிப்பை தடுக்கும் அணை ஏற்படுத்தும் நடவடிக் கையை முன்னெடுத்துள்ளது. நகரசபை தவிசாளர் எஸ்.எச்.எம். அஸ்பரின் மேற்பார்வையின் கீழ் சுமார் நானூறுக்கும் அதிகமான மண் மூடைகளைக் கொண்டு அணை அமைக்கும் பணி துரிதமாக இடம்பெற்று வருகின்றது..

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.09.2022இல் வெளியிடப்பெற்றது.